2003 மார்ச் 27]

திரு. செ. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் தொகுதிக்கு உட்பட்ட டி.பழூர் ஒன்றியத்திலிருந்து குக்கிராமங்களுக்கு—ஜெயங்கொண்டத்திலிருந்து—இயக்கப்படும் பேருந்துகள் மிகவும் குறைவாக இருக்கின்றன. அதன் காரணமாகப் பயணிகள் மிகவும் அவதிக்குள்ளாகிறார்கள். எனவே, கிராம மக்களின் முன்னேற்றத்திற்கு வழிவகை செய்யும் தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் கூடுதல் பேருந்துகள் விட அரசு ஆவன செய்யுமா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் பகுதியில் அரசுப் பேருந்துகள் மூலமாகவும், தனியார் பேருந்துகள் மூலமாகவும், சிற்றுந்துகள் மூலமாகவும் தேவையான கிராமங்களுக்குத் தேவையான அளவிலே பேருந்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுப்படையாக, இன்னும் வசதி செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். குறிப்பிட்டு, இன்னின்ன கிராமங்களுக்குப் பேருந்து வசதி இல்லை, அந்தக் கிராமங்களுக்குச் செய்ய வேண்டும் என்று கேட்பாரேயானால், அதுபற்றி அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 112, திரு. எஸ். கே. செல்வம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

112—

புதிய கட்டடம்

•8182—திரு. எஸ்.கே. செல்வம்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளதை அரசு ஏற்குமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சத்யமேவ ஜெயதே வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

சேலம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. அவ்வலுவலகத்துக்குச் சொந்தக் கட்டடம் கட்டும்பொருட்டு, சேலம் மாவட்டம் மற்றும் வட்டம், கந்தம்பட்டி கிராமத்தில் புல எண் 59/1-ல் 1.55 ஹெக்டேர் நிலத்தினை வருவாய்த் துறை, போக்குவரத்துத் துறைக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. அரசின் நிதி நிலைமைக்கு ஏற்ப, சேலம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு அவ்விடத்தில் சொந்தக் கட்டடம் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ்.கே. செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகர் இன்று வளர்ந்து வருகின்ற நகரங்களில், சென்னை, மதுரை நகரங்களுக்கு அடுத்தாற்போல் உள்ள பெரிய நகரமாகும். அங்கே இயங்கி வரும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் வாடகைக் கட்டடத்தில், ஆண்டுக்கு ஓர் இடமாக இயங்கி வருகின்றது. மேலும், நகரின் நெரிசலான பகுதியிலே இப்போது இயங்கி வருகிறது. இதனால், வாகனங்களைப் புதுப்பிக்க வருகிறவர்களும், புதிய வண்டிகளைப் பதிவு செய்ய வருகிறவர்களும், புதிய வாகன ஓட்டுநர் உரிமம் பெற வருகிறவர்களும் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றார்கள். எனவே, நமது இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர் அம்மா அவர்களுடைய ஆட்சியில் இதற்கு உடனடியாகக் கட்டடம் கட்டித் தரப்படுமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தைப் பொறுத்த அளவிலே, இன்றைக்கு நிலம் கையகப்படுத்தப்பட்டு, திட்ட மதிப்பீடு பெறப்பட்டுள்ளது. நிதி நிலைமைக்கு ஏற்ப, சேலம் நகரத்திலே, சேலம் வட்டாரப் போக்குவாத்து அலுவலகத்திற்கு என்று, தனியாகக் கட்டடம் கட்டுவது பற்றி அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஐ. கணேசன்.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் நகரம் மாநகராட்சியைச் சேர்ந்தது. மிகப் பெரிய மாநகராட்சியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் ஆண்டுக்கு ஒரு முறை வாடகைக் கட்டடத்திலே மாறி, மாறி இயங்கி வருகிறது. இந்த நிதி ஆண்டிலாவது அதற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன் வருமா?

2003 மார்ச் 27]

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன பதில் போதுமானது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 113, திரு. கு. அன்பழகன், மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

113—

தொழிற்பேட்டை

***18569—திரு. கு. அன்பழகன்:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1991 முதல் 1996 ஆம் ஆண்டு வரை நிலக்கோட்டை தொகுதியில் சிப்காட் தொழிற்பேட்டை தொடங்க நிலம் கையகப்படுத்தப்பட்டு, பின்னர் கைவிடப்பட்டது, மீண்டும் செயல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நிலக்கோட்டை தொகுதியில் சிப்காட் தொழில் வளாகம் அமைப்பதற்குத் தேவையான நிலம் சுமார் 380 ஏக்கர் கையகப்படுத்தி, அதில் 250 ஏக்கர் நிலப்பரப்பில் தொழிற்சாலை தொடங்கத் தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தும் அமைக்கப்பட்டு, நிலம் ஒதுக்கீடு செய்யத் தயார் நிலையிலுள்ளது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் ஒரு மருத்துவத் தொழில் பூங்காவை சுமார் 380 ஏக்கர் நிலப்பரப்பில் சிப்காட், நிலக்கோட்டை தொழில் வளாகத்தில் தொடங்குவதற்கான சாத்தியக் கூறுகளை ஏற்படுத்தி வருகிறது.

திரு. கு. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை நவீன தொழில் மிகுந்த நாடாக உருவாக்க வேண்டும் என்பதற்காக, 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எனது நிலக்கோட்டை தொகுதியில் சுமார் 380 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி, அவ்வாறு கையகப்படுத்திய நிலத்திற்குப்